மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே இங்கே பேசுகின்றபோது சான்றிதழ்தான் பொய் என்று சொன்னேன். உறுப்பினர்கள் பேசுகின்றபோது பொய் சொல்லப் பட்டது என்ற வகையிலேதான் பேசக்கூடாது. ஆகவே பொய் என்ற வார்த்தையே அன்பார்லிமென்டரி என்று சொல்வதற்கில்லை.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை உரிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

6. அறிக்கைகள் அளித்தல்.

(அ) உரிமைக் குழு.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவரவர்களே, உறுப்பினர் திரு அ. ரகுமான்கான் அவர்கள் மீதுள்ள உரிமை மீறல் பிரச்சினை பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) மதிப்பீட்டுக் குழு.

திரு. ஏ. சி. சண்முகம் : தலைவர் அவர்களே, கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்த மதிப்பீட்டுக் குழுவின் எட்டாவது அறிக்கையை (ஏழாவது சட்டமன்றப் பேரவை) பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) பொது நிறுவனங்கள் குழு.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1970–71 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கண்டுள்ள பொது நிறுவனங்களுடன் தொடர்பான பத்திகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1973–74) இரண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்த மேற்படிகுழுவின் பத்தாவது அறிக்கையை (ஏழாவது சட்டமன்றப் பேரவை) பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) 1972–73 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறை தலைவரின் வணிகத்துறைகள் மீதான அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு (1977–78) அளித்த நான்காவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் பேரில் அரசு எடுத்த

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் பதினொன்றாவது அறிக்கையை (ஏழாவது சட்டமன்றப் பேரவை) பேரவைக்கு அளிக்கிறேன்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) பாரதியார் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு 1981 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 79/1981)

(ஆ) பாரதிதாசன் பல்கலைக் கழகச் சட்டமுன் வடிவு, 1981 (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 80/1981)

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, பாரதியார் பல்கலைக் கழகம், மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழகம் ஆகியவற்றை ஏற்படுத்துவது பற்றிய மசோதாக்களின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்ததிலே பெருமை அடைகிறேன்.

விடுதலை இயக்கம் ஊக்கம் பெறுகின்ற வகையிலே புரட்சிப் பாடல்களை உருவாக்கிய விடுதலை வீரர் அவர்களுடைய பெயரால் அரசு கொண்டு வந்ததைப் பாராட்டுகிறேன்.

மற்ற பல்கலைக் கழகங்களை ஏற்படுத்தி 100 ஆண்டுகள் ஆகி நூற்றாண்டு விழாக்கள் எல்லாம் கொண்டாடப்பட்டதற்குப் பிறகும் சென்னைப் பல்கலைக் கழகத்திலே பழைய முறைகளிலே தான் பாடத் திட்டங்கள் இருப்பதை நாம் பார்த்து வருகின்றோம். ஆனால் இந்த மசோதாவிலே அவற்றைத் திருத்தி அமைக்கின்ற வகையிலே சொல்லப்படவில்லை. இருப்பினும் இப்போது ஒன்றும் காலம் ஆகி விடவில்லை. அமரகவி பாரதியார் அவர்கள் என்னவெல்லாம் நினைத்தார்களோ, நாட்டிற்கு எப்படிப்பட்ட தொழில் வளங்கள் வேண்டும் என்றெல்லாம் நினைத்தார்களோ அவற்றை எல்லாம் வெறும் புத்தகப் படிப்பு என்ற வகையிலே இல்லாமல் உப பாடங்களாகக் கொண்டுவருகின்ற வகையிலே இந்த மசோதாவின் மீது திருத்தங்களை அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்கள் என்று நான் நம்புகிறேன்.

ஆகவே பாரதிதாசன் அவர்கள் பெயராலும், பாரதியார் அவர்களுடைய பெயராலும் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்துவதிலே நாம் பெருமையடையலாம். ஆனால் அதே நேரத்திலே பாரதியாரும், பாரதிதாசனும் என்னென்ன சொல்லி இருக்கிறார்கள் என்பதையும் நினைவிலே கொண்டு அவற்றைப் பாடமாக வைத்தால் நன்றாக இருக்கும்.

பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும் ஏற்பட்டிருப்பினும் நூற்றாண்டு விழாக்கள் எல்லாம் கொண்டாடப்பட்டிருப்பினும் தமிழகத்திலே உள்ள தாழ்த்தப்பட்ட மகனோ, மலை ஜாதி